

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2025) சென்னை, கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்கு கால் முறிவு ஏற்பட்டு சிகிச்சை பெற்று வந்த மருத்துவ பயனாளியிடம் சிகிச்சை விவரம் குறித்து கேட்டறிந்தபோது, சிகிச்சை நல்ல முறையில் அளிப்பதாக அவர் தெரிவித்தார். இந்த ஆய்வின்போது, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், மருத்துவமனை இயக்குநர் மருத்துவர் பார்த்தசாரதி மற்றும் மருத்துவர் ரமேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2025) சென்னை, கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, வருகை பதிவேட்டினை பார்வையிட்டார்.



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு அவர்கள் டெல்டா தொகுதிகளுக்குட்பட்ட 41 மாவட்டச் செயலாளர்களுடன் காணொலி வாயிலாக நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்று உறுப்பினர் சேர்க்கையை விரைவில் முடிக்க துரிதப்படுத்தி ஆலோசனைகள் வழங்கினார்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

வருவாய்த் துறை அமைச்சர் தலைமையில் ஒரு உயர்நிலைக் குழு அமைத்து, ஐந்து மாதத்திற்குள் ஐந்து இலட்சம் பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும் என்று ஒரு இலக்கு நிர்ணயித்தோம்! இதனால், ஐந்தே மாதங்களில் எத்தனை பேருக்கு பட்டா கிடைத்திருக்கிறது தெரியுமா? 7 இலட்சத்து 27 ஆயிரத்து 606 பேருக்கு பட்டா கிடைத்திருக்கிறது!

இதுவும் போதாது என்று சென்னை மற்றும் சுற்றுப்புறங்களிலும், பிற நகர்ப்புறப் பகுதிகளிலும் ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில் வாழும் மக்களுக்கும் பட்டா வழங்க வேண்டும் என்று அரசாணை வெளியிட்டோம். அதில், 79 ஆயிரத்து 448 தகுதியான பயனாளிகள் கண்டறியப்பட்டு, 63 ஆயிரத்து 419 பேருக்கு பட்டா வழங்க ஒப்புதல் அளித்து, 20 ஆயிரத்து 221 பேருக்கு பட்டா வழங்கியிருக்கிறோம். மீதமுள்ள பட்டாக்களை ஒரு மாதத்தில் வழங்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்!

இப்படி, மே 2021-லிருந்து, தற்போது வரைக்கும் வழங்கப்பட்டிருக்கும் மொத்த பட்டாக்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 17 இலட்சத்து 74 ஆயிரத்து 561 பேருக்கு பட்டா வழங்கியிருக்கிறோம்! அதாவது பல இலட்சம் குடும்பங்களின் கனவை நிறைவேற்றியிருக்கிறோம்! இதில், இந்த செங்கல்பட்டு மாவட்டத்தில் மட்டும், 41 ஆயிரத்து 858 பேருக்கு பட்டா வழங்கியிருக்கிறோம். இந்த மகிழ்ச்சியோடுதான், இதன் தொடர்ச்சியாக இன்றைக்கு இந்த மாபெரும் விழாவில், ஆயிரத்து 672 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பிலான வீட்டுமனைப் பட்டாக்களை 20 ஆயிரத்து 21 பயனாளிகளுக்கு நான் வழங்கியிருக்கிறேன்!

**தமிழ்நாடு தலைநிமிர்ந்து நிற்கிறது!**

தென்குமரியிலிருந்து சென்னை வரைக்கும் சமச்சீரான வளர்ச்சி இருக்க வேண்டும் என்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பார்த்துப் பார்த்து திட்டங்களை நாம் செயல்படுத்துகிறோம்! தொழில் நிறுவனங்களைக் கொண்டு வருகிறோம்! வேலைவாய்ப்புகளை உறுதி செய்கிறோம்! இதனால்தான், 11.19 விழுக்காடு பொருளாதார வளர்ச்சியோடு நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் இன்றைக்கு தமிழ்நாடு தலை நிமிர்ந்து நிற்கிறது!

14 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த தலைவர் கலைஞர் ஆட்சிக்குப் பிறகு, இப்போதுதான், இந்த இரட்டை இலக்கை நாம் அடைந்திருக்கிறோம். இது சாத்தியமாகியிருக்கிறது! நாட்டிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு வளர்ச்சி இல்லை! ஏன், நாட்டின் வளர்ச்சியையும் compare செய்து பார்த்தால், நாம் தான் மிஞ்சியிருக்கிறோம்! இதுதான் தி.மு.க. ஆட்சி! இதுதான் திராவிட மாடல் ஆட்சி! இதுதான் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் ஆட்சி!

**அறிவுஜீவி போல் அறிக்கை விடும் எடப்பாடி!**

2011-லிருந்து 2021 வரைக்கும் பத்தாண்டுகாலம் பின்னோக்கிச் சென்ற தமிழ்நாட்டை, இந்த நான்கு ஆண்டுகளில், மீட்டெடுத்து, வளர்ச்சிப் பாதையின் உச்சத்திற்குக் கொண்டு நாம் சேர்த்திருக்கிறோம்! இதைப் பொறுத்துக்கொள்ள முடியாத எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள், அவர்களின் நண்பரான ஒன்றிய அரசு கொடுத்த புள்ளிவிவரத்தையே சரியில்லை என்று பேசுகிறார்! அவருக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம்... வளர்ச்சியின் அளவீடு என்பது, பொருளாதார அளவுகோல்தான்! இந்த அடிப்படை கூட தெரியாமல், அறிவுஜீவி போல இன்றைக்கு அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார். உங்களுக்கு என்ன வயிற்றெரிச்சல் என்றால், இந்திய அளவில் பிரதமர் மோடியால் சாதிக்க முடியாததை - மற்ற மாநிலத்தில் இருக்கக்கூடிய முதலமைச்சர்கள் சாதிக்க முடியாததை - இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சாதித்துக் கொண்டிருக்கிறானே! என்பதுதான் அவர்கள் வயிற்றெரிச்சலுக்குக் காரணம்!

பழனிசாமி அவர்களே... நீங்கள் கூட்டணி வைத்திருக்கும் ஒன்றிய அரசால்கூட மறைக்க முடியாத - மறுக்க முடியாத அளவிற்குச் சாதனைகள் செய்து தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் நாம் கொண்டு செல்கிறோம். இது மட்டுமல்ல, திராவிட மாடல் 2.0-வில் இன்னும் வேகமாக, இன்னும் அதிகமான வளர்ச்சியை ஏற்படுத்துவோம்! இந்திய நாடே தமிழ்நாட்டைத் திரும்பிப் பார்த்து, "இதுதான் வளர்ச்சி! இதுதான் வழி!" என்று சொல்லும் அளவிற்கு நிச்சயமாகச் செயல்படுவோம்! அதை நீங்கள் எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்து பார்க்கத்தான் போகிறீர்கள்!

என்னைப் பொறுத்தவரைக்கும், மக்களுக்காக உழைப்பவன்! இந்த ஸ்டாலினை மக்கள் நம்பி ஒப்படைத்திருக்கிறார்கள்! தமிழ்நாட்டு மக்களின் ஆதரவோடு எங்கள் பயணம் தொடரும்... தொடரும்... தொடரும்... என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

**பழனிசாமி அவர்களே... நீங்கள் கூட்டணி வைத்திருக்கும் ஒன்றிய அரசால்கூட மறைக்க முடியாத - மறுக்க முடியாத அளவிற்குச் சாதனைகள் செய்து தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் நாம் கொண்டு செல்கிறோம். இதுமட்டுமல்ல, திராவிட மாடல் 2.0-வில் இன்னும் வேகமாக, இன்னும் அதிகமான வளர்ச்சியை ஏற்படுத்துவோம்! இந்திய நாடே தமிழ்நாட்டைத் திரும்பிப் பார்த்து, "இதுதான் வளர்ச்சி! இதுதான் வழி!" என்று சொல்லும் அளவிற்கு நிச்சயமாகச் செயல்படுவோம்! அதை நீங்கள் எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்து பார்க்கத்தான் போகிறீர்கள்!**

## திருப்புவனம் அஜித்குமார் குடும்பத்துக்கு

# அரசு சார்பில் மேலும் ரூ.25 லட்சம் நிவாரண நிதி!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த அஜித்குமார் குடும்பத்தினருக்கு, நேற்று முன்தினம் (8.8.2025) கூடுதல் நிவாரண நிதி ரூபாய் 25 இலட்சத்திற்கான காசோலையினை நேரில் சென்று வழங்கினார். உடன் சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் உட்பட பலர் உள்ளனர்.

**சிவகங்கை, ஆக.10 -**

**கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த அஜித்குமார் குடும்பத்தினருக்கு, கூடுதல் நிவாரண நிதி ரூபாய் 25 இலட்சத்திற்கான காசோலையினை நேரில் சென்று வழங்கி, ஆறுதல் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த செல்வன் அஜித்குமார் என்பவரின் குடும்பத்தாரிடம் கடந்த 1.7.2025 அன்று அலைபேசியின் வாயிலாக தொடர்பு கொண்டு, தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து, உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும், அக்குடும்பத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதாகவும் தெரிவித்தார்கள். அதன்படி, சிபிஐ விசாரணை குழுவின் சார்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், கடந்த 2.7.2025 அன்று கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணையினை, மறைந்த அஜித்குமார் சகோதரரான நவீன்குமார் (வயது 27) அவர்களுக்கு, சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிட், (காரைக்குடி) டெக்னீசியன் பணியிடத்திற்கென உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது.

அக்குடும்பத்தினரின் கோரிக்கைக்கிணங்க மதுரையிலுள்ள ஆவின் நிறுவனத்தில் பணி நியமன ஆணையினை மாற்றி வழங்கிடவும்,

முன்னதாக இக்குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட வீட்டு மனை பட்டா தொடர்பாக, மாற்று இடம் வேண்டி விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பாகவும், உரிய நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, கடந்த 14.7.2025 அன்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், அக்குடும்பத்தினருக்கு ரூபாய் 7.50 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலையினை நேரில் சென்று வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவிற்கிணங்க, தமிழக அரசின் சார்பில் கூடுதல் நிவாரண நிதி ரூபாய் 25 இலட்சத்திற்கான காசோலையினையும், நேற்று முன்தினம் (8.8.2025) கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில், அக்குடும்பத்தினரிடம் நேரில் வழங்கி, ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்வின் போது, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், திருப்புவனம் வட்டாட்சியர் விஜயகுமார் உட்பட பலர் உடனிருந்தனர்.

## இந்தியத் தேர்தல் ஆணையம் மீது குற்றவியல் மோசடி தொடர்பான

# ராகுல்காந்தியின் குற்றச்சாட்டுக்களை எளிதாக எடுத்துக்கொள்ளக்கூடாது!

## 'தி இந்து' ஆங்கில நாளேடு தலையங்கம்!

*சென்னை, ஆக. 10 -*


தேர்தலில் வாக்கு திருட்டு தொடர்பான, ஆதாரங்களை மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டது குறித்து THE HINDU ஆங்கில நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.

அதில், கர்நாடகாவில் ஒரே தொகுதியில் ஒரு லட்சம் போலி வாக்காளர்களை சேர்த்து இருப்பதை ஆதாரங்களுடன் ராகுல் காந்தி குற்றம் சாட்டியிருப்பது குறிப்பிடப்பட்டுள்ளது. 2024 மக்களவைத் தேர்தல் முதல், பல்வேறு மாநிலத் தேர்தல்களில் பாஜகவுடன் தேர்தல் ஆணையம் கூட்டு வைத்து மிகப்பெரிய அளவில் மோசடி செய்துள்ளதாக ராகுல் காந்தி கூறியதும், இதேபோன்று, மகாராஷ்டிரா வாக்காளர் பட்டியலில் 5 ஆண்டுகளை விட மக்களவை தேர்தல் முடிந்த அடுத்த 5 மாதத்தில் அதிக வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் மகாராஷ்டிராவின் மொத்த மக்கள்தொகையை காட்டிலும் வாக்காளர்கள் எண்ணிக்கை அதிர்ச்சி அளிக்கும் விதமாக அதிகரித்துள்ளதாக ராகுல் காந்தி சுட்டிக்காட்டியதையும் THE HINDU தலையங்கம் குறிப்பிட்டுள்ளது. இந்திய தேர்தல் ஆணையம் மீது குற்றவியல் மோசடி தொடர்பான ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுக்களை எளிதாக கடந்து செல்ல முடியாது என்று THE HINDU ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

வாக்குகள் திருடப்பட்டது குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து, ராகுல் பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் என கூறுவது தேர்தல் ஆணையம் தற்காப்பு நடவடிக்கைகள் எடுத்துள்ளதை வெளிச்சம் போட்டு காட்டுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ராகுல் காந்தியின் இந்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் விரிவான வாக்காளர் பட்டியல் சீர்திருத்தத்திற்கான அவரசத் தேவையை வலியுறுத்துவதாகவும் கூறப்பட்டுள்ளது. மிகவும் நம்பகமான முறையான வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியலை சரிபார்ப்பு மூலம் மட்டுமே இந்த குறைகளை நிவர்த்தி செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீகாரில் அவசரம், அவசரமாக வாக்காளர் பட்டியல் சிறப்பு நடவடிக்கையை தேர்தல் ஆணையம் மேற்கொண்டது புதிய சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் THE HINDU தலையங்கத்தில் விமர்சிக்கப்பட்டுள்ளது. பீகாரில் ஆண்களை காட்டிலும் பெண் வாக்காளர்கள் அதிகம் நீக்கப்பட்டிருப்பதாக ராகுலின் குற்றச்சாட்டை புறந்தள்ளிவிட முடியாது என்றும் கூறப்பட்டுள்ளது.



THE HINDU

**Fix the flaws**

Voter registration problems demand systemic solutions by the ECI

The Leader of the Opposition in the Lok Sabha, Rahul Gandhi, has levelled serious allegations of "criminal fraud" against the Election Commission of India (ECI), by claiming that over one lakh fake votes were created in the Mahadevapura Assembly segment of the Bangalore Central Lok Sabha constituency in order to ensure a victory for the Bharatiya Janata Party (BJP) in the 2024 general election. His detailed presentation outlining five categories of alleged electoral malpractices demands careful examination, not wholesale dismissal. The Congress leader's documentation reveals troubling patterns: voters registered multiple times within the same constituency, identical Electors Photo Identity Card (EPIC) numbers across different States, and improbably large numbers of voters listed at single addresses. While identical EPIC [illegible]

விவிபேட் வாக்குகளை எண்ணுதல், விவிபேட் இயந்திரங்களில் சின்னங்களை பதிப்பதற்கு போதுமான தொழில்நுட்ப வசதிகள் இல்லாததது போன்றவை ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுக்களுக்கு வலுசேர்ப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. வாக்குச்சாவடிகளில் உள்ள CCTV காட்சிகளை ஆராயவேண்டும், இறுதி வாக்குப்பதிவு புள்ளி விவரங்களை வெளியிடுவதில் தாமதம் போன்ற விமர்சனங்களுக்கு தேர்தல் ஆணையம் பதிலளிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையம் தனது நம்பகத் தன்மையை மீட்டெடுக்க வேண்டுமானால், தொழில்நுட்ப ரீதியாக மட்டுமில்லாமல், பாரபட்சமற்ற மற்றும் வெளிப்படைத்தன்மையை நிரூபிக்க வேண்டும் என்றும் இதன்மூலம், பொதுமக்களுக்கு தேர்தல் ஆணையம் மீது நம்பிக்கை ஏற்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. ஜனநாயக அமைப்புகள் மூலம் மாற்று தேர்தல் செயல்முறைகளில் தேர்தல் ஆணையம் ஈடுபடவேண்டும் என்றும் இல்லையென்றால் ஜனநாயக நிர்வாகத்துக்கு மிகமிக ஆபத்துக்களை ஏற்படுத்தும் என்றும் THE HINDU ஆங்கில நாளேடு வெளியிட்டுள்ள தலையங்கத்தில் அழுத்தம் திருத்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது.